1995 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 139, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

139—

திருவிழந்தூர் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்டக் குடிநீர் வழங்குதல்

35528ஏ*—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

திருவிழந்தூர் பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டி பாதுகாக்கப்பட்டக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவிழந்தூர், மயிலாடுத்துறை நகராட்சியின் ஒரு பகுதியாகும். மயிலாடுதுறை நகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் கொள்ளிடம் ஆற்றினை நீர்ஆதாரமாகக் கொண்டு தயாரிக்க, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுப்பணிகள் முடிவுற்று மதிப்பீடு தயாரிக்கப்படும்போது மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்ட திருவிழந்தூர் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் முப்பதாண்டுகளுக்கு முன் காவிரியில் போர் இறக்கி மேல்நிலைத் தொட்டி கட்டி தண்ணீர் சப்ளை ஆகிவருகிறது. முன்பிருந்த ஜனத்தொகைக்கு அது போதுமானதாக இருந்தது. தற்போது மயிலாடுதுறையின் ஜனத்தொகையில் பாதி நபர்கள் திருவிழந்தூர் பகுதியில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு நீண்டகாலமாகத் தண்ணீர் சப்ளை கிடையாது. அந்தப் பகுதிக்குச் சென்ற ஆண்டு ஒரு போர் இறக்கி நேரடியாகத் தண்ணீர் சப்ளை செய்தார்கள். அந்தத் தண்ணீர் கல்லும் மண்ணும் கலந்து காவி நிறத்தில் வருவதால், அதை யாரும் உபயோகிப்பதில்லை. அந்தத் தண்ணீரை பாட்டிலில் பிடித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் அனுப்பியும், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. அந்தப் பகுதியில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்ட அதற்கான இடத்தை தனி நபர் ஒருவர் கொடுத்து இருக்கிறார். அதனால், அந்தப் பகுதியை காவிரி ஆற்றிலிருந்து வரும் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

பதில் சொல்லி இருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு அந்தத் திட்டத்தில் சேர்த்து இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரை பழைய கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருக்கிற காரணத்தினாலேதான், தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, அங்கே இருக்கிற அந்த நீண்ட காலப் பிரச்சினை ஒரு தீர்வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற காரணத்தினாலே, ஒரு புதிய ஆய்வை மேற்கொள்ளச் சொல்லி ஆணையிட்டதின் பேரிலேதான், இப்போது ஆய்வுப் பணிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. திருவிழந்தூர் பகுதியைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, மயிலாடுதுறையில் இருக்கிற பாதி மக்கள் அங்கே வசிக்கவில்லை. திருவிழந்தூர் பகுதியைப் பொறுத்தவரை அங்கே 600 பேர்தான் மக்கள் தொகை இருப்பதாக எனக்குக் குறிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. அங்கேயும்கூட இன்றைக்கு 3 பொதுக் குழாய்களும், இந்தியா மார்க்-3 கைப் பம்பு ஒன்றும், 3 வடிமுனைக் குழாய்களும் மற்றும் திருவிழந்தூர் பகுதியிலே இருக்கிற தனிப்பட்ட தனியார் வீடுகளுக்கு 30 வீட்டுக் குழாய் இணைப்புகளும் கொடுத்து குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. இருப்பினும் இங்கே வழங்கப்படுகிற நீர் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினாலேதான் இப்போது புதிய மேம்பாட்டுத் திட்டம், கொள்ளிடம் ஆற்றுநீரை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்க தமிழக முதல்வர் ஆணையிட்டதன் பேரிலே தற்போது ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அந்த ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றவுடன் இந்தப் பகுதிக்கு அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தெரிவித்தபடி அந்தக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகச் செய்து கொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் இல்லை என்று நான் சொல்லவில்லை. அங்கு வருகின்ற தண்ணீர் கல்லும் மண்ணுமாக இருக்கின்றது; அதை உபயோகப்படுத்த

1995 மார்ச் 28]

முடியவில்லை. அதனால் அப்பகுதி மக்கள் ரொம்ப சிரமப்படுகிறார்கள். ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தண்ணீருக்காக வேண்டி எந்தப் பகுதியிலும் பிரச்சினை இருக்கக்கூடாது என்று சொல்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வழங்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது வழங்கப்படுகிற குடிநீரிலே குறைபாடு இருப்பதாகச் சொல்லி இருக்கிறார். அதை உடனடியாக ஆய்வு செய்து, அந்தக் குறை இருப்பின் நிச்சயமாக அதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து அந்தக் குறையைத் தீர்க்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே, எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பது உண்மை. கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பாகக்கூட 25-ஆம் தேதி புதுக்கோட்டையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் நீண்ட காலமாகத் துவங்கப்படாத புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தன்னுடைய பொற்கரங்களாலே (மேசையைத் தட்டும் ஒலி) திறந்து வைத்து, சுமார் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, 90 கிலோ மீட்டர் தூரத்திலே இருந்து கொண்டுவரப்பட்டு உலக வங்கித் திட்டத்தின் மூலம் அந்த நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. அதைப் போல தமிழகத்திலே இருக்கிற ஒவ்வொரு உலக வங்கித் திட்டமும் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகுதான், சுமார் 217 கோடி ரூபாய்க்கு மேல் அவற்றிற்கு பணிகள் முடிக்கப்பட்டு, முந்தைய ஆட்சிக் காலத்திலே ஒதுக்கப்பட்ட தூசி படிய இருந்த திட்டங்கள் எல்லாம், இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டு மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, இன்றைக்கு சுமார் ஒரு கோடி மக்களுக்கு மேலாகப் பயன்படுகிற வகையில், 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசு என்றைக்கும் முன்னுரிமை கொடுக்கிற அரசு. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரச்சினையும் உடனடியாகத் தீர்க்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.